**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி 27.03.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

கூட்டுறவு முறையில் செயல்படும் **வாடகைக் கார் சேவை** ஒன்றை, அரசு, விரைவில் தொடக்கும் என, மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா அறிவித்துள்ளார்.

**வக்ஃபு திருத்த மசோதாவை** விலக்கிக் கொள்ள மத்திய அரசை வலியுறுத்தி, தமிழக சட்டமன்றத்தில் இன்று, தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க மத்திய அரசை வலியுறுத்தி, புதுச்சேரி சட்டமன்றத்தில், மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் தாயகம் திரும்புவரை, அவர்களது குடும்பங்களுக்கு மாதம் **500** ரூபாய் வழங்கபடும் என, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிவித்துள்ளார்.

------------------------

*கூட்டுறவு டாக்ஸி* (10)

ஊபர் – ஓலா போல, **சஹகார் டாக்ஸி** என்ற பெயரில், கூட்டுறவு முறையில் செயல்படும் **வாடகைக் கார் சேவை** ஒன்றை அரசு தொடக்கும் என, மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா அறிவித்துள்ளார். **கூட்டுறவு மூலம் அபிவிருத்தி** என்னும் அரசின் கொள்கைக்கு ஏற்றதாக, இந்த முன்முயற்சி அமையும் என, அவர் இன்று

மக்களவையில், விவாதம் ஒன்றில் பேசுகையில் கூறினார். பெரிய அளவில் தொடக்கப்பட உள்ள கூட்டுறவு வாடகைக் கார் சேவையினால், லாபம் நேரடியாக ஓட்டுனருக்குச் செல்ல ஏதுவாகும் என்று அவர் தெரிவித்தார். கூட்டுறவு காப்பீட்டு நிறுவனம் ஒன்றும், விரைவில் அமைக்கப்படும் என, அமைச்சர் மேலும் கூறினார்.

------------------------

*அஷ்வினி வைஷ்ணவ்* (16)

5-ஜி தொலைத் தொடர்புத் துறையில், உலகின் 2ஆவது மிகப் பெரிய சந்தையாக இந்தியா திகழ்வதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பல்வேறு துறைகளுக்கு அரசு அளித்து வரும் முக்கியத்துவம் காரணமாக, அடிப்படையான பல மாறுதல்கள் உருவாகி இருப்பதாகவும், பல்வேறு துறைகளில் மொத்தம் 11 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யப் படுவதாகவும் கூறினார். இந்தியாவின் ரயில்வே துறை இவ்வாண்டில், 1.6 பில்லியன் டன் சரக்குகளை கையாண்டு, உலகின் 2ஆவது மிகப் பெரிய சரக்குப் போக்குவரத்து கட்டமைப்பாக மேம்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இந்தியத் துறைமுகங்களும், அபார வேகத்தில் வளர்ச்சி அடைந்து வருவதாக கூறினார். 10 ஆண்டுகளுக்கு முன்னர், மின்னணுவியல் உற்பத்தியில், மிகவும் பின்தங்கி இருந்த இந்தியா, தற்போது உலகின் முன்னணி ஏற்றுமதி நாடாக திகழ்வதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியாவின் யுபிஐ பணப் பட்டுவாடா முறையில், அனைத்து தெற்குலக நாடுகள் மட்டுமின்றி, பணக்கார நாடுகளும் ஆர்வம் காட்டுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

------------------------

*செமி கண்டக்டர்* (14)

இண்டியா செமி கண்டக்டர் இயக்கத்தின் கீழ், மத்திய அரசு செமி கண்டக்டர் நிறுவனங்களுக்கு வழங்கும் தாராளமான சலுகைகள், மற்றும் மானியங்களால், நாட்டில் இத்துறை விரிவடைந்து வருவதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலர் திரு. எஸ். கிருஷ்ணன் கூறியுள்ளார். இந்தியாவின் செமி கண்டக்டர் தொழிற் சூழல் குறித்து பெங்களூரில் இன்று நடைபெற்ற, மாநாட்டின் தொடக்க விழாவில் உரையாற்றிய அவர், செமி கண்டக்டர் சில்லுகளை இந்தியாவிலேயே தயாரிக்கும் கனவு, இவ்வாண்டு இறுதிக்குள் நிறைவேறும் என்றார். தற்போது, சுமார் 50 ஆயிரம் பில்லியன் டாலராக உள்ள இந்தியாவின் செமி கண்டக்டர் துறை, 2030ஆம் ஆண்டிற்குள், 110 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என, திரு. கிருஷ்ணன் தெரிவித்தார். செமி கண்டக்டர் சூழல் மேம்பட்டு வருவதால், வெளிநாடுகளில், அதி நவீன தொழில்நுட்பத் துறைகளில் பணிபுரிந்து வரும் இந்திய வல்லுனர்கள், தாயகம் திரும்பவும் ஏதுவாகும் என்று அவர் மேலும் கூறினார்.

------------------------

*பிரசார் பாரதி* 1 (11)

இந்திய ஊடக, மற்றும், கேளிக்கை துறையின் உள்ளடக்கம் பெரிய அளவில், ஜனநாயக மயமாகி வருவதாகவும், தொழில்நுட்பத்தின் உதவியுடன் தொலைதூர பகுதிகளில் இருந்தும் திறமைசாலிகள் இத்துறைக்கு வந்து கொண்டிருப்பதாகவும், **பிரசார் பாரதி தலைமை செயல் அதிகாரி திரு. கவுரவ் துவிவேதி** கூறியுள்ளார். இன்று மும்பையில், கேளிக்கை மற்றும் ஊடகத் துறைக்கான **FICCI-EY அறிக்கையின்** வெளியீட்டு விழாவில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். புதிய தொழில்நுட்பங்களால், ஊடக மற்றும் கேளிக்கை துறைக்கான உள்ளடக்கத்தின் வடிவத்திலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருவதால், தவறான **உள்ளடக்கத்தின் நுகர்வை** தவிர்ப்பது குறித்து எச்சரிக்கை அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்….

**(வாய்ஸ்)**

*பிரசார் பாரதி* 2 (12)

**(வாய்ஸ்)**

மத்திய தகவல் -ஒலிபரப்பு அமைச்சகத்தின் முன் முயற்சியான, தேசிய படைப்புத் திறன்சார் தொழில்நுட்பக் கழகத்தின் மூலம், புதிய உள்ளடக்கம் மற்றும் தொழில்நுட்பங்களுக்கு மாற ஏதுவாகும் என்று, **பிரசார் பாரதி தலைமை செயல் அதிகாரி** கூறினார். அமைச்சகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள **WAVES** மாநாடு குறித்து அவர் பேசுகையில், உலக

அளவிலான ஊடகம், மற்றும், கேளிக்கை துறையினர் பலரையும், ஒரே மேடையில் கொண்டு வருவதாக இம்மாநாடு அமையும் என்றார். WAVES உச்சி மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி வைத்து, பன்னாட்டு ஊடகத் துறை நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளுக்கு இடையிலான வட்ட மேசைக் கூட்டத்திற்கும் தலைமையேற்க உள்ளதாக அவர் தெரிவித்தார். பல்வேறு அமர்வுகள் மற்றும் கலாச்சார செயல்பாடுகளும், WAVES மாநாட்டில் இடம்பெறும் என, அவர் மேலும் கூறினார்.

------------------------

*மன் கீ பாத் (8)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாட்டு மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும், 120 ஆவது மன் கீ பாத் நிகழ்ச்சி, ஆகாஷ்வாணியில், வரும் 30 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை, பொது மக்கள் நாளை 28-ஆம் தேதி வரை, 1800-11-7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவோ, அல்லது நமோ செயலி மற்றும் மை-கவ் இணையதளம் மூலமாகவோ தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

------------------------

*தமிழ்நாடு சட்டமன்றம் (15)*

வக்ஃபு திருத்த மசோதாவை விலக்கிக் கொள்ள மத்திய அரசை வலியுறுத்தி, தமிழக சட்டமன்றத்தில் இன்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. அரசியல் சாசனப்படியான அடிப்படை உரிமைகளுக்கு எதிரான இம்மசோதா, வக்ஃபு வாரியத்தின் அதிகாரங்களை பறிப்பதாக அமையும் என்று, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், தீர்மானத்தை அவையில் கொண்டு வந்து பேசுகையில் கூறினார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு அரசும், சிறுபான்மை மக்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டுமே தவிர, உரிமைகளுக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடாது என்று அவர் குறிப்பிட்டார். முக்கிய எதிர்கட்சியான அஇஅதிமுக, மற்றும், பாமக உள்ளிட்ட கட்சிகள், தீர்மானத்திற்கு ஆதரவு அளித்தன. பிஜேபி உறுப்பினர்கள் தீர்மானத்தை ஆட்சேபித்து வெளிநடப்பு செய்தனர். பிஜேபி சட்டமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் தேசிய மகளிர் அணித் தலைவருமான திருமதி வானதி ஸ்ரீனிவாசன், பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், வக்ஃபு சட்டத்தில் திருத்தம் கொண்டு வரும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருப்பதாக கூறினார்.

------------------------

*புதுச்சேரி தீர்மானம் (8)*

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி, 16 ஆவது முறையாக சட்டமன்றத்தில் இன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திமுக மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்கள் கொண்டு

வந்த தனி நபர் தீர்மானம் அரசுத் தீர்மானமாக மாற்றப்பட்டு ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. அதனை தொடர்ந்து சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் அவை நடவடிக்கைககளை கால வரையின்றி ஒத்தி வைத்தார். கடந்த 10 ஆம் தேதி தொடங்கிய புதுச்சேரி சட்டப்பேரவையின் பட்டெஜட் கூட்டத் தொடர், 13 அமர்வுகளாக நடைபெற்று முடிந்துள்ளது.

------------------------

*ரங்கசாமி (9)*

இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் தாயகம் திரும்புவரை அவர்களது குடும்பங்களுக்கு மாதம் 500 ரூபாய் வழங்கபடும் என புதுச்சேரி சட்டப்பேரவையில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அறிவித்துள்ளார். இன்று பட்ஜெட் மீதான விவாதங்களுக்கு பதில் அளித்த அவர், புதுச்சேரியில் கொரானா காலத்தில் பணி புரிந்து, பின்னர், பணி நீக்கம் செய்யப்பட்ட 252 செவிலியர்களுக்கு, ஒப்பந்த அடிப்படையில் வேலை வழங்கப்படும் என்றும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஊழியர்களுக்கான 8 ஆயிரத்து 500 ரூபாய் சம்பளம், 15 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

------------------------

*மருத்துவ ஆக்ஸிஜன் (12)*

மருத்துவ ஆக்ஸிஜன் நிர்வாகத்தில், ஒரே சீரான திறம்பட்ட நடைமுறைகளை, அனைத்து மருத்துவமனைகளும் பின்பற்றுவதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன், மத்திய அரசால் தயாரிக்கப் பட்டுள்ள

தேசிய அளவிலான வழிகாட்டு நெறிமுறைகளை, சுகாதாரத் துறைச் செயலர் திருமதி புண்யா சலீலா ஸ்ரீவாஸ்தவா, புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில், இன்று நடைபெற்ற பயிலரங்கில் வெளியிட்டார். மருத்துவத் தேவைகளுக்கான ஆக்ஸிஜனை சேமித்து வைப்பதற்கான உபகரணங்களை, அவசரத் தேவைகளின் போது உடனடியாக பயன்படுத்துவதற்கு ஏற்றதாகப் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். மருத்துவ ஆக்ஸிஜன் நிர்வாகத்தில், பயிற்சி பெற்ற மனிதவளத்தை உருவாக்கும் நோக்கத்திலான, தேசிய திட்டமும், இன்றைய பயிலரங்கில் தொடக்கி வைக்கப்பட்டது.

-----------------------

தேயிலை (10)

2024ஆம் ஆண்டில் இந்தியா, இலங்கையைத் தாண்டி, உலகின் இரண்டாவது பெரிய தேயிலை ஏற்றுமதி நாடாக மேம்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மொத்தம் 255 மில்லியன் கிலோ அளவிற்கு, இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு, தேயிலை ஏற்றுமதி செய்யப் பட்டதாக, இந்தியத் தேயிலை வாரியம் வெளியிட்டுள்ள தரவுகள் மூலம் தெரிய வந்துள்ளது. கடந்த 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 10 சதவிகிதம் அதிகமாகும். இந்தியாவில் தேயிலை உற்பத்தியை அதிகரிக்கவும், தேயிலை உற்பத்தியாளர்களின் நலன்களை மேம்படுத்தவும், சுய உதவிக் குழுக்கள், உழவர்-உற்பத்தியாளர் அமைப்புகள் உட்பட பல்வேறு

நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

கேலோ இண்டியா (9)

புதுடெல்லியில், கேலோ இண்டியா பாரா விளையாட்டுப் போட்டிகள் இன்று முடிவடைந்தன. இன்று கடைசி நாளில் இடம்பெற்ற பாரா டேபிள் டென்னிஸ் இறுதிப் போட்டிகளில், யெஸ்டி பம்காரா, பாவிகா குக்காதியா, பிராச்சி பாண்டே, சசிதர் குல்கர்னி உள்ளிட்டோர், தத்தம் பிரிவுகளில் தங்கம் வென்றனர். ஆடவர் சதுரங்கப் பிரிவில், சஞ்சீவ் ஹம்மன்னவார், தங்கப் பதக்கம் வென்றார். புதுடெல்லியில் கடந்த 8 நாட்களாக நடைபெற்ற, கேலோ இண்டியா பாரா விளையாட்டுப் போட்டிகளில், 6 விளையாட்டுப் பிரிவுகளைச் சேர்ந்த, சுமார் ஆயிரத்து 300 பாரா விளையாட்டு வீரர்-வீராங்கனைகள் பங்கேற்றனர்.

------------------------

*ஐபிஎல் (4)*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு ஐதராபாத்தில் நடைபெறும் ஆட்டத்தில் ஐதராபாத் – லக்னோ அணிகள் மோதுகின்றன. குவஹாத்தியில் நேற்று இரவு நடைபெற்ற போட்டியில், கொல்கத்தா அணி, 8 விக்கெட் வித்தியாசத்தில், ராஜஸ்தான் அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

------------------------

*வானிலை* (11)

இன்றும், நாளையும் தமிழகத்தில், அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவுதான் என்றாலும், அதன் பின்னர் 31ஆம் தேதி வரை, வெப்பநிலை ஓரிரு இடங்களில், 2 டிகிரி செல்சியஸ் வரை உயரக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டலத்தின் கீழடுக்கில், கிழக்கு மற்றும் மேற்கு திசைக் காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதால், இன்றும், நாளையும், மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதை ஒட்டிய மாவட்டங்களில், லேசானது முதல், மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழகத்தின் இதர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், 31ஆம் தேதி வரை, வறண்ட வானிலையே நிலவும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

------------------------

*புதுமையாக்கம்-கோயல் (6)*

நாட்டின் வளர்ச்சியை புதுமைக் கண்டுபிடிப்புகளே தீர்மானிக்கும் என்று, மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற தேசிய அறிவுசார் சொத்துரிமை விருது வழங்கும் விழாவில் அவர் பேசுகையில், அறிவுசார் சொத்துரிமைத் துறையில் இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் ஈடுபட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

கூட்டுறவு முறையில் செயல்படும் **வாடகைக் கார் சேவை** ஒன்றை, அரசு, விரைவில் தொடக்கும் என, மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. அமித் ஷா அறிவித்துள்ளார்.

**வக்ஃபு திருத்த** மசோதாவை விலக்கிக் கொள்ள மத்திய அரசை வலியுறுத்தி, தமிழக சட்டமன்றத்தில் இன்று, தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க மத்திய அரசை வலியுறுத்தி, புதுச்சேரி சட்டமன்றத்தில், மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் தாயகம் திரும்புவரை, அவர்களது குடும்பங்களுக்கு மாதம் 500 ரூபாய் வழங்கபடும் என, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி அறிவித்துள்ளார்.